**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 89/2020 |
| Name | : Palanisamy (Retd. Food safety officer) |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : Madathukulam |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.10.2022

**முதல் விசாரணை**

(1) நான் மடத்துக்குளம் உணவு பாதுகாப்பு அலுவலராக பணி செய்து தற்போது பணி ஓய்வு பெற்றுள்ளேன். நான் கடந்த 31.05.2017 ம் தேதி மடத்துக்குளத்தில் உள்ள கோவை சூர்யா பேக்கரியில் அதன் உரிமையாளர் எஸ்.கண்ணன் அவர்கள் கடையில் உணவு பரிசோதனை மேற்கொள்ள சென்றேன். அதில் தரமற்ற டீ தூள் எவ்வித லேபிலும் இல்லாமல் உள்ள டீ தூள் பயன்படுத்தப்பட்டது தெரிந்து அது தரமற்றதாக இருக்கலாம் என்று கருதி தனித்தனியாக 4 பிளாஸ்டிக் கவர்களில் 200 கிராம் டீ தூள் மாதிரிக்கு எடுத்துக்கொள்டு அதற்குண்டான தொகையை செலுத்தி விற்பனையாளரின்

வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கையெழுத்து பெற்றேன். மேற்படி மாதிரிகளில் ஒன்றை அவருக்கு கொடுத்துவிட்டு மீதி 3 தேயிலை தூள் மாதிரிகளை ஆய்வுக்கு அனுப்புவதற்கு நான் எடுத்து சென்றேன்.

(2) பின்பு மேற்படி 3 தேயிலை தூள் மாதிரிகளை அதன் தரம் அறியும் பொருட்டு மதுரை உணவு பகுப்பாய்பு கூடத்திற்கு அனுப்பி அறிக்கை பெற்றேன். அந்த அறிக்கையில் மேற்படி தேயிலை தூள்கள் பாதுகாப்பு இல்லாதது என்று அறிக்கை கொடுக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் அடிப்படையில் உணவு பாதுகாப்பு சட்டம் 2006 பிரி வு 59 (1) ன் படியும், உரிய உரிமம் இல்லாமல் விற்பனை செய்ததற்கு உணவு பாதுகாப்பு சட்டம் விதி 63 ன் படியும் எதிரி மீது குற்ற வழக்கு தொடுப்பதற்கு அனுமதி வேண்டி மாவட்ட நியமன அலுவலரிடம் கேட்டு அவர் அனுமதி அளித்தார். மேற்படி எதிரி மீது உணவு பாதுகாப்பு பிரி வு 59 (1) ன் படி வழக்கு கணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

(3) மேலும் 20.04.2012 தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழ் நகல் அ.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது. 20.09.2011 தேதியிட்ட உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்களின் ஆணை அ.சா.ஆ.2, 31.05.2017 தேதியிட்ட படிவம் 5(ஏ) குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு சார்வு செய்யப்பட்டதற்கான நகல் அ.சா.ஆ.3, 31.05.2017 தேதியிட்ட உணவு மாதிரிக்கான ரொக்க ரசீது அ.சா.அ.4, 31.05.2017 தேதியிட்ட குற்றம் சாட்டப்பட்டவரின் உணவு பொருள் உரிமையாளரின் வாக்குமூலம் அ.சா.ஆ.5, 31.05.2017 ம் தேதி NAPL ஆய்வுக்கு அனுப்ப விருப்பமில்லை என் வழங்கிய கடிதம் அ.சா.ஆ.6, 31.05.2017 தேதிய படிவம் 6 அ.சா.ஆ.7, 31.05.2017 ம் தேதிய மாதிரி அரக்கு முத்திரை படிவம் அ.சா.ஆ.8, 31.05.2017 ம் தேதிய நியமன அலுவலர் திருப்பூர் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பி உணவு மாதிரி எடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.9, 01.06.2017 ம் தேதிய உணவு மாதிரியை உணவு பகுப்பாளர் மதுரை அவர்களுக்கு அனுப்பி அதை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அ.சா.ஆ.10, 01.06.2017 தேதியி படிவம் 6 மாதிரி முத்திரை பதித்த படிவம் உணவு பகுப்பாய்வுக்கு அனுப்பிய தபால் ரசீது அ.சா.அ.11, 01.06.2017 தேதிய நியமன அலுவலர் உணவு மாதிரியை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை கடிதம் அ.சா.ஆ.12, 23.10.2017 ம் தேதிய உணவு பகுப்பாளர் அறிக்கை படிவம் (B)

அ.சா.ஆ.13, 24.10.2017 தேதிய உணவு பகுப்பாளர் அறிக்கையை குற்றம் சாட்டப்பட்டவருக்கு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது அ.சா.ஆ.14, 04.11.2017 ம் தேதிய குற்றம் சாட்டப்பட்ட சூர்யா பேக்கரி உரிமையாளர் அரசால் பரிந்துரை செய்யப்பட்ட பரிசோதனை கூடத்திற்கு உணவு மாதிரியை அனுப்ப விருப்பமில்லை என கொடுத்த கடிதம் அ.சா.ஆ.15, 04.11.2017 ம் தேதிய குற்றம் சாட்டப்பட்ட சூர்யா பேக்கரி உரிமையாளர் அவர் பற்றிய கடிதம் மற்றும் உணவு பாதுகாப்பு உரிமம் அ.சா.ஆ.16, 04.06.2017 ம் தேதிய குற்ற வழக்கு தொடர உணவு பாதுகாப்பு ஆணையர் வழங்கிய உத்திரவு அ.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.